**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், இலுப்பூர்**

CC. 243/2023
PW2
நாள். 05.03.2026
பெயர்: ஐசக் பாண்டியன்
த/பெ : வெள்ளபாண்டியன்
ஊர் : சங்கரன் கோவில் ,தென்காசி

Solemnly affirmed by Thiru. Abraham Selvin , JA of this Court in accordance with the provisions of Act X of 1873

**எதிரிகள் ஆஜர் .**

**Solemnly affirmed in accordance with the Indian Oaths Act-1969 Section -6(2) on** the **day 05th day of March 2026.**

**As Per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No. 74663/2024/F1 – Dt.21.02.2025 the identity of the witness verified with their identity card.**

**Aathar Card of the Witness verified.**

<u>அ.சா.2 மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>

1. 1,2 எதிரிகள் என்னையும், எனது மனைவியையும் ஆபாசமாக பேசிவில்லை என்றால் சரிதான். 1,2 எதிரிகள் எங்களை கொலை மிரட்டல் எதுவும் விடுக்கவில்லை என்றால் சரிதான். வழக்கு புகாரில் என்ன எழுதியிருந்து என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். ஏற்கனவே எதிரிகளுக்கும் எனக்கும், பணம் கொடுக்கல் ,வாங்கல் பிரச்சனை இருந்தது என்றால் சரிதான். அந்த முன்விரோதத்தின் காரணமாக எனது முதல் விசாரணையில் எதிரிகள் என்னை ஆபாசமாக பேசியதாகவும், கொலை மிரட்டல் விடுத்ததாகவும் சாட்சியம் அளித்தேன் என்றால் சரிதான்.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதிகோரப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது)**

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை :</u>

ஆஜர் எதிரிகளுடன் நான் சமாதானமாக சென்று விட்டேன் என்றால் சரிதான் . நான் ஏற்கனவே இந்நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான் . எதிரியுடன் சமாதானமாக சென்று விட்டதால் நான் தற்போது முதல் விசாரணையில் உள்ள சங்கதிகளுக்கு முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.